**Under Section 173 BNSS**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8082318
C

1. District மாவட்டம்: பெரம்பலூர் | PS: காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு | Year ஆண்டு: 2024 | FIR No. மு.த.அ. எண்: 03 | Date: நாள்: 06-09-2024

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: ACT 1988 (as ammended 2018) | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 05.09.24 மாலை | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் சுமார் 17.00hrs. | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 06.09.24 | Time : நேரம் காலை சுமார் 07.00hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 1.கி.மீட்டர் தெற்கு
   Beat Number : முறைக் காவல் எண் – | (b) Address : முகவரி –
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : – | District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ப. பாலசுப்ரமணியன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பழனியாண்டி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 61/24 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் பட்டதாரி ஆசிரியர் (ஓய்வு) | (g) Address : முகவரி அரணாரை வடக்கு, சுவாமி தியேட்டர் பின்புறம், பெரம்பலூர் தாலுக்கா, பெரம்பலூர் DT.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet If necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. திருபாலன் – பெரம்பலூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ஐ-2 பிரிவு உதவியாளர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதமில்லை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு [signature]

Signature of the Officer in-charge, Police Station [signature]
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 06.09.24
10.00 AM.

Name: பெயர் K. S. HEMA CHITRA
Rank: நிலை D.S.P. V.A.C. No. எண் ..........
PERAMBALUR.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

கனம் தலைமை குற்றவியில் நீதித்துறை நடுவர் / சிறப்பு நீதிபதி, பெரம்பலூர்.

06.09.2024-ம் தேதி காலை சுமார் 07.00 மணிக்கு பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பளராகிய நான் அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது திரு.ப.பாலசுப்ரமணியன் என்பவர் என் முன் ஆஜராகி கணிணியில் தட்டச்சு செய்யப்பட்ட ஒரு புகார் கொடுத்தார். அந்த புகாரை பெற்று புகாரின் தன்மையும் புகார் தாரர் மற்றும் எதிரியின் நடத்தை மற்றும் உண்மை தன்மை பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டேன். அந்த புகாரின் சாரம் பின்வருமாறுள்ளது. அனுப்புநர்: ப. பாலசுப்ரமணியன், வயது-61,த.பெ பழனியாண்டி, அரணாரை வடக்கு, பெரம்பலூர் (வட்டம் & மாவட்டம்) பெறுநர். உயர்திரு. காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, பெரம்பலூர். மதிப்பிற்க்குரிய அம்மா, நான் பெரம்பலூர் மாவட்டம், அரணாரை வடக்கு கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் M.A M.Ed வரை படித்துள்ளேன். நான் பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், பசும்பலூர் அரசு ஆதி திராவிடர் நல உயர் நிலைப்பள்ளியில் (சமூக அறிவியல்) பட்டதாரி ஆசிரியராக பணியாற்றி 31.07.2024-ம் தேதியன்று வயது முதிர்வு காரணமாக பணியிலிருந்து ஒய்வு பெற்றேன். மேலும் 02.06.2024-ம் தேதிக்கு மேல் ஆசிரியராக பணிபுரிந்து பணியிலிருந்து பணி ஓய்வு பெற்றால் மாணவர்களின் நலன் கருதி அந்த நடப்பு கல்வி ஆண்டு முடியும் வரை ஓய்வு பெறும் அந்த ஆசிரியருக்கு பணி நீட்டிப்பு ஆணை வழங்குவது வழக்கம். 31.07.2024 தேதியன்று நான் ஓய்வு பெற இருந்ததால் இதன் அடிப்படையில் **28.05.2024-ம்** தேதி 2024-2025-ஆம் ஆண்டிற்கான கல்வியாண்டு முழுவதும் எனக்கு பணி நீட்டிப்பு ஆணை வழங்க வேண்டி வழி வழியாக 1) உயர்திரு. இயக்குநர் அவர்கள், ஆதி திராவிடர் இயக்குநரகம், சென்னை அவர்களுக்கும் 2) மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், மாவட்ட ஆட்சியரகம், பெரம்பலூர் ஆகியோருக்கு எனக்கு பணி நீட்டிப்பு ஆணை வழங்க பரிந்துரை செய்ய கோரி பசும்பலூர் அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, தலைமை ஆசிரியர் அவர்களிடம் மனு அளிந்திருந்தேன். தலைமை ஆசிரியர் அவர்களும் எனது கடிதத்தினை முன்மொழிந்து மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர் அவர்களுக்கு அனுப்பி வைத்தார். இந்நிலையில் 31.07.2024-ம் தேதியன்று நான் பணியிலிருந்து ஓய்வு பெற்றேன். எனக்கு பணி நீட்டிப்பு ஆணை வழங்கவில்லை ஆனால் உத்தரவு வரும் வரை தொடர்ந்து பள்ளியில் பணியாற்றுமாறு பெரம்பலூர் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அவர்களின் வாய்மொழி உத்தரவு படி 01.08.2024 முதல் மேற்படி பள்ளியில் நாளது தேதி வரை சமூக அறிவியல் பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். பணி நீட்டிப்பு ஆணை எனக்கு கிடைக்கப்பெறாததால் நான் 05.09.2024-ம் தேதியன்று மாலை சுமார் 05.00 மணியளவில் பெரம்பலூர் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அலுவலகத்தில் பணியாற்றி வரும் ஐ-2 பிரிவு உதவியாளர் திரு.சிவபாலன் என்பவரை அணுகி விசாரித்த போது அவர் தங்களது பெட்டிஷன் என்னிடம் தான் உள்ளது. நான் புட் அப் பண்ணினால் தான் ஆபிஸர் உங்களுக்கு ஆணையிடுவார். இதனை எல்லாம் சரி செய்து உங்களுக்கு பணி நீட்டிப்பு ஆணை வழங்க வேண்டுமென்றால், நீங்கள் எனக்கு பணம் கொடுக்க வேண்டும், நீங்கள் எனக்கு லஞ்சம் கொடுத்தால் மட்டுமே நான் அதிகாரிகளிடம் கையொப்பம் பெற்று தருவேன். அதற்கு நீங்கள் ரூபாய் 40,000/- எனக்கு தர வேண்டும் எனக் கூறினார். நான் அதற்கு தற்சமயம் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை எனக் கூறினேன். அதற்கு அவர் பணம் கொடுத்தால் தான் நான் உங்களுடைய பணி நீட்டிப்பு ஆணையில் அதிகாரியிடம் கையொப்பம் பெற முடியும் பணம்

இல்லையென்றால் உங்கள் வேலை முடியாது என்று கூறினார். தற்சமயம் என்னிடம் ரூபாய் 40,000/- பணம் கையில் இல்லை. நாளை ரெடி பண்ணிட்டு வந்து பார்க்கிறேன் எனக் கூறிவிட்டு வந்து விட்டேன். நான் எனது வீட்டிற்க்கு சென்று யோசனை செய்து பார்த்தேன். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை எனவே மேற்கண்ட பெரம்பலூர் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அலுவலகத்தில் பணியாற்றும் திரு.சிவபாலன், உதவியாளர் மீது சட்டபடி நடவடிக்கை எடுக்க வேண்டி இன்று நான் 06.09.2024-ம் தேதி காலை சுமார் 07.00 மணிக்கு அவர் கேட்ட ரூபாய் 40,000/- பணத்துடன் பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து காவல் துணை கண்காணிப்பாளரிடம் மேற்படி திரு.சிவபாலன், உதவியாளர் மீது சட்டபடி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (sd***ப.பாலசுப்ரமணியன்). அந்த புகார் மனுவை பெற்று அதில் Sir, Received this Computerized typing complaint from the complainant on 06.09.2024 at 07.00 hrs, verified and ascertained its genuineness through sources, and registered a case on the complaint on 06.09.2024 at 09.00 hrs in Perambalur Vigilance and Anti-Corruption Detachment Crime No.03/2024, u/s 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018). (sd) K.S.Hemachithra, Deputy Superintendent of Police, Vigilance and Anti-Corruption, Perambalur. I am submitting the Original F.I.R. along with the complaint to the Hon'ble Court of the Chief Judicial Magistrate/Special Judge, Perambalur and the copies of the F.I.R to all other concerned Officials.

6/9/2024
(K.S. HEMACHITHRA
DSP, VAC,
PERAMBALUR.